


# ஸத் ஸம்ப்ரதாயம்



**रक्ताङ्गं सुचतुर्भुजं सुरुचिरं**
**नानाविभूषोज्ज्वलं**
**भक्तानां सुलभं सुवर्णमुकुटं**
**लीलागजास्यं विभुम् ।**
**सर्वात्मानमचिन्त्यरूपमघं**
**सर्वज्ञसर्वेश्वरं**
**विघ्नेशं हृदि चिन्तयामि सततं**
**सर्वार्थसंसिद्धये ॥**

**ரக்தாங்க3ம்' ஸுசதுர்பு4ஜம்'**
**ஸுருசிரம்'**
**நானாவிபூ4ஷோஜ்ஜ்வலம்'**
**ப4க்தானாம்' ஸுலப4ம்'**
**ஸுவர்ணமுகுடம்'**
**லீலாக3ஜாஸ்யம்' விபு4ம் |**
**ஸர்வாத்மானமசிந்த்யரூபமக4ம்'**
**ஸர்வஜ்ஞஸர்வேஶ்வரம்'**
**விக்4னேஶம்' ஹ்ரு'தி3 சிந்தயாமி**
**ஸததம்' ஸர்வார்த2ஸம்'ஸித்3த4யே**
**||**

சிவந்தமேனியர், நான்கு கைகளுள்ளவர், மிக அழகிய தோற்றமுள்ளவர், தங்கக்கிரீடமணிந்தவர், பல அழகிய ஆபரணங்களை அணிந்தவர், பக்தர்களுக்கு எளிதில் கிட்டுபவர், விளையாடுகிற யானை முகமுள்ளவர், எங்கும் இருப்பவர், எல்லாமானவர், உருவகப்படுத்த இயலாத வடிவமுள்ளவர், எவ்வித குறையுமில்லாதவர், எல்லாமாயிருப்பவர், எல்லாம் வல்லவர், இந்த விக்கினேஸ்வரரை நாடியதை பெற எப்போதும் உள்ளத்தில் கொள்கிறேன்.

.

## அருள் மொழிகள்

**ஒரு ஞானிக்கு மறுபிறவி கிடையாது. உடலிருக்கும்போதே அவனுக்கு பந்தத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது. அவன் செய்ய வேண்டியதையெல்லாம் செய்தவனாகிறான். அடைய வேண்டியதை அடைந்தவனாகிறான். அவன் ஆத்மஸ்வரூபமான தன்னையே எங்கும் காண்கிறான்.**

—ஜகத்குரு சங்கராசார்யர் அபிநவ வித்யா தீர்த்த மஹா ஸ்வாமிகள்



## நீதிசதகம்

(மஹாகவி பர்த்ருஹரி)

**प्राण आघातात् निवृत्ति: परधनहरणे संयम: सत्यवाक्यं**
**काले शक्त्या प्रदानं युवतिजनकथा मूखभावा परेषां ।**
**तृष्णास्रोतो: विभङ्गो गुरुषुच विनय: सर्वभूत अनुकंपा**
**सामान्ये सर्वशास्त्रेषु अनुपहत विधि: श्रेयसां एष पन्था: ॥**


**ப்ராண ஆகா4தாத் நிவ்ரு’த்தி: பரத4னஹரணே ஸம்’யம: ஸத்யவாக்யம்’**
**காலே ஶக்த்யா ப்ரதா3னம்’ யுவதிஜனகதா2 மூக2பா4வா பரேஷாம்’ |**
**த்ரு’ஷ்ணாஸ்ரோதோ: விப4ங்கோ3 கு3ருஷுச வினய: ஸர்வபூ4த அனுகம்பா**
**ஸாமான்யே ஸர்வஶாஸ்த்ரேஷு அனுபஹத விதி4: ஶ்ரேயஸாம்’ ஏஷ பந்தா2: ||**

ஸாதுக்களுடன் கூடுவதில் இச்சை, பிறர் நற்குணங்களில் ப்ரியம், குருவிடம் பணிவு, கல்வி கற்பதில் விடாமுயற்சி, மனைவியிடம் சிற்றின்பம், ஜனங்களின் பழிச்சொல்லுக்கு பயம், பரமேஸ்வரனிடத்தில் பக்தி, தன்னடக்கத்தில் முனைப்பு துஷ்டர்கள் தொடர்பு இல்லாமை, இவ்வாறான நற்குணங்கள் உடைய சிறந்த மகான்களுக்கு நமஸ்காரம்.

(ஸுஜன மூர்க்க பத்ததி: (சான்றோர் இயல்பு)

## விதுர நீதி

निषेवते प्रशस्थानि निन्दिथानि न सेवते ।
अनास्तिक: श्रद्दधान एतत्पण्डितलक्षणम् ॥2॥
நிஷேவதே ப்ரஶஸ்தா2னி நிந்தி3தா2னி ந ஸேவதே |
அனாஸ்திக: ஶ்ரத்3த3தா4ன ஏதத்பண்டி3தலக்ஷணம் ||2||



நல்ல காரியங்களைச் செய்வான். கெட்ட காரியங்களைச் செய்யமாட்டான். நாஸ்திகத் தன்மையில்லாதவனாயும் சிரத்தையுள்ளவனாயும் இருப்பான். இவ்வாறு பண்டிதன் இருப்பான்.

यथाशक्तिं चिकीर्षन्ति यथाशक्तिं च कुर्वते ।
न किंचिदवमन्यन्ते नरा: पण्डितबुद्धय: ॥3॥
யதா2ஶக்திம்’ சிகீர்ஷந்தி யதா2ஶக்திம்’ ச குர்வதே |



ந கிஞ்சித³வமன்யந்தே நரா: பண்டி³தபு³த்³த⁴ய: ||3||

அறிவாளிகளான மனிதர்கள் தன் சக்திக்கு ஏற்றவாறு காரியங்களைச் செய்ய விரும்புகிறார்கள். தன் சக்திக்குத் தக்கவாறு காரியங்களைச் செய்வது முடிப்பார்கள். சிறிதளவு கூட யாரையும் எதற்கும் அவமதிப்பதில்லை.

नाप्राप्यमभिवाञ्छन्ति नष्टं नेच्छन्ति शोचितुम् ।
आपत्सु च न मुह्यन्ति नरा: पण्डितबुद्धय: ॥4॥

நாப்ராப்யமபி⁴வாஞ்ச²ந்தி நஷ்ட²ம்’ நேச்ச²ந்தி ஶோசிதும் |
ஆபத்ஸு ச ந முஹ்யந்தி நரா: பண்டி³தபு³த்³த⁴ய: ||4||

அறிவாளிகளாக மனிதர்கள் கிடைப்பதற்கரிதான பொருளில் ஆசை வைப்பதில்லை. நஷ்டமான பொருளைக் குறித்து சிறிதும் துயரத்தை அடைவதுமில்லை. ஆபத்துக்கள் வந்த போதிலும் கலங்குவதில்லை.

आर्यकर्मणि रज्यन्ते भूतिकर्माणि कुर्वते ।
हितं च नाभ्यसूयन्ति पण्डिता भरतर्षभ ॥5॥

ஆர்யகர்மணி ரஜ்யந்தே பூ⁴திகர்மாணி குர்வதே |
ஹிதம்’ ச நாப்⁴யஸூயந்தி பண்டி³தா ப⁴ரதர்ஷப⁴ ||5||

ஓ திருதராஷ்டிர மஹா ராஜனே! அறிவாளிகளான மனிதர்கள் பெரியோர்கள் செய்துவந்த காரியங்களைச் செய்ய ஆசைப்படுவார்கள். ஸம்பத்துக்களை உலகத்துக்கு அளிக்கும் நல்ல கர்மங்களையும் செய்வார்கள். நன்மையை உபதேசிப்பவர்களிடம் பொறாமைப்படுவதில்லை.

न हृष्यत्यात्मसंमाने नावमानेन तप्यते ।
गाङ्गो ह्रद इवाक्षोभ्य: य: स पण्डित उच्यते ॥6॥

ந ஹ்ரு’ஷ்யத்யாத்மஸம்’மானே நாவமானேன தப்யதே |
கா³ங்கோ³ ஹ்ரத³ இவாக்ஷோப்⁴ய: ய: ஸ பண்டி³த உச்யதே |||6||

யாராவது பூஜித்தால் அதற்காக சந்தோஷப் படுவதில்லை. அவமதித்தாலும் தாபத்தை அடைவதில்லை. கங்கையின் மடுவைப் போல் எவன் கலக்கமடையாமல் இருக்கிறானோ, அவனே சிறந்த அறிவாளி.

प्रवृत्तवाक् चित्रकथ: ऊहवान् प्रतिभानवान् ।
आशु ग्रन्थस्य वक्ता च य: स पण्डित उच्यते ॥7॥

ப்ரவ்ரு’த்தவாக் சித்ரகத²: ஊஹவான் ப்ரதிபா⁴னவான் |
ஆஶு க்³ரந்த²ஸ்ய வக்தா ச ய: ஸ பண்டி³த உச்யதே ||7||

எந்த மனிதன் தடங்கலில்லாத சொற்களை உடையவனோ, ஆச்சரியமான கதைகளைக் கூறுவானோ, விஷயங்களை ஊஹத்தால் அறிவானோ, மேன்மேலும் புதிது புதிதாக யோசனை கூறுவானோ, நூல்களிலுள்ள விஷயங்களை உடன் சபையில் சொல்லுவானோ, அவனே அறிவாளியெனப் படுவான்.


(தொடரும்...)



# ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## ஆசார்யர் என்பவர் யார் ?



வேதவியாஸருடைய சூத்திரர்களுக்கு இப்பேற்பட்ட பாஷ்யம் வர வேண்டும் என்று சொன்னால், அந்த வேதவியாஸருடைய சூத்திரங்கள் மிகவும் புண்ணியம் செய்திருக்கின்றன. அதனால், பகவத்பாதருடைய பாஷ்யம் அந்த ஸூக்திகளுக்குக் கிடைத்திருக்கிறது. அப்படியேற்பட்ட பாஷ்யங்களை எழுத வேண்டுமானால் எப்பேற்ப்பட்ட காருண்யம் அவருக்கு இருந்திருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல், சதுராம்ணாய பீடஸ்தாபனம் செய்ய வேண்டுமென்றால் எவ்வளவு ஒரு தீர்க்கதரிசனம் அவருக்கு இருந்திருக்க வேண்டும்! நாமும் எவ்வளவோ காரியங்களைப் பண்ணுவோம். ஆனால், இவ்வளவு தீர்க்கதரிசியாக இருந்து செய்வது இல்லை. “இன்னும் ஆயிரக் கணக்கான வருடங்கள் ஆனாலும்கூட நாம் செய்த இந்தக் காரியத்திற்கு தடை வரக் கூடாது, இது அவிச் சின்னமாக நடக்க வேண்டும்.” என்கிற பாவத்திலே இருந்து அப்படி யொரு பீடஸ்தாபனம் செய்ய வேண்டுமானால் எப்படியொரு தீர்க்க தரிசனம் அவருக்கு இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது.

இப்படியொரு காருண்ய உருவமாக இருந்ததால் பகவத்பாத சங்கரர் ஜகத்திற்கு குருவாக இருந்து ஜகத்குரு சப்தத்தை ஸார்த்தகமாக்கினார். அப்பேற்பட்ட ஜகத்குருவான ஆதிசங்கரபகவத்பாதர் நமக்கு எத்தனையோ உபதேசங்களை அனுகிரஹித்தார். அவருடைய உபதேசங்களில் எந்த ஓர் உபதேசத்தையாவது நாம் சரியாகக் கடைப்பிடித்தால் நம்முடைய ஜென்மம் எவ்வளவோ தன்யமாகி விடும்.

ஹர நம: பார்வதீ பதயே | ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் | ஜய ஜய ராம ராம ||

( ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ மஹா ஸன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)



# புருஷ ஸூக்தம்

**(ரிக்வேதம், 10.8.90)**

**விளக்கம் மட்டும் இங்கு பார்க்கப்படும்**

20. மஹிமை பொருந்தியவரும், சூரியனைப்போல் ஒளிர்பவரும், இருளுக்கு அப்பால் இருப்பவருமாகிய இந்த இறைவனை நான் அறிவேன். அவரை இவ்வாறு அறிபவன் இங்கே இந்தப் பிறவியிலேயே முக்தனாக ஆகிறான். முக்திக்கு வேறு வழி இல்லை.



21. இறைவன் பிரபஞ்சத்தில் செயல்படுகிறார். பிறக்காத வராக இருந்தும் அவர் பல்வேறு வடிவங்களில் தோன்றுகிறார். அவரது உண்மையான வடிவத்தை மகான்கள் நன்றாக அறிகிறார்கள். பிரம்மா போன்றோர்கூட மரீசி முதலிய மகான்களின் பதவியை விரும்புகிறார்கள்.

22. யார் தேவர்களிடம் தேஜஸாக விளங்குகிறாரோ, தேவர்களின் குருவாக இருக்கிறாரோ, தேவர்களுக்கு முன்பே தோன்றியவரோ அந்த ஒளிமயமான பரம்பொருளுக்கு நமஸ்காரம்.

23. பரம்பொருளைப்பற்றிய உண்மையை அளிக்கும் போது தேவர்கள் ஆதியில் அதைப்பற்றி பின்வருமாறு கூறினார்கள்: “யாராக இருந்தாலும் பரம்பொருளை நாடுபவன் இவ்வாறு அறிவானால் அவனுக்கு தேவர்கள் வசமாக இருப்பார்கள்.”

24. நாணத்தின் தலைவியாகிய ஹ்ரீ தேவியும், செல்வத்தின் தலைவியாகிய லட்சுமி தேவியும் உமது மனைவியர். பகலும் இரவும் உமது பக்கங்கள், நட்சத்திரங்கள் உமது திருவுருவம், அசுவினி தேவர்கள் உமது மலர்ந்த திருவாய்.

25. எம் பெருமானே ! நாங்கள் விரும்புவதைக் கொடுத்தருள்வாய். இவ்வுலக இன்பத்தைக் கொடுத்தருள்வாய், இகத்திலும் பரத்திலும் அனைத்தையும் தந்தருள்வாய் !

**புருஷ ஸூக்தம் முற்றும்**



# என்றும் புதியவர்
## ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

**முன்னுரை**

ஆசார்யாளின் வரலாற்றைப் படித்தால், வேதாந்த தத்துவத்தை அறிவதற்கான தகுதிகள் எல்லாம் சிறு வயதிலேயே அவரிடம் அமைந்திருந்தன என்பது தெரிகிறது. மேலும், தமது குரு ஸ்ரீமத் சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் செய்த உபதேசம், மற்றும் சாஸ்திரம் இவற்றின் அடிப்படையிலேயே ஆத்ம தத்துவத்தை விசாரம் செய்துத் தம் மனதை உள்ளே திருப்பிப் பரம்பொருளை உணர்ந்து, அதில் நிலைபெற்றார். தகுதியுள்ள சிஷ்யர்களைப் பரம்பொருளில் நிலைத்திருக்கச் செய்தார். இவை எல்லாம் அவருடைய வரலாற்றில் விவரமாக எழுதப்பட்டிருக்கின்றன. எனவே இந்த விஷயத்தில் “ஆசார்யாள்” என்று இவரைக் குறிப்பது மிகச் சரியே. இது தொடர்பாக ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் தாம் இயற்றிய நாமாவளியில் “शास्त्रतात्पर्यसंवेदी” (சாஸ்திரத்தின் தாத்பர்யத்தை நன்கு அறிந்தவர்) “योगमार्गविशारदः” (யோக மார்க்கத்தில் வல்லவர்); “ब्रह्मतत्त्वानुसन्धाता” (பரம்பொருளை மனதில் நிறுத்தியவர்); “ब्रह्मविद्योपदेशकः” (பிரம்மா தத்துவத்தைப் பிறருக்கு உபதேசிப்பவர்) முதலான பெயர்களில் அழகாகத் தொடுத்திருப்பது இங்கே நினைக்கற்பாலது.




அடுத்ததாக தர்ம சாஸ்திரத்தை எடுத்துக் கொண்டாலும் “ஆசார்யர்” என்ற சொல் ஆசார்யாள் விஷயத்தில் மிகப் பொருத்தமானதே. ஒரு ஸந்யாஸிக்கு உரிய குணங்கள் என்ன என்பதை ஆசார்யாள் வாழ்ந்து காட்டினார்.இதைத் தவிர சிருங்கேரி சாரதா பீடாதிபதிக்குப் பல்வேறு நியமங்கள் உண்டு. அவை எல்லாவற்றையும் ஆசார்யாள் விடாமல் கடைப்பிடித்தார். நாடெங்கிலும் யாத்திரை செய்து ஆயிரக்கணக்கான சிஷ்யர்களுக்கு அவரவருக்கு ஏற்ற தர்மத்தை உபதேசித்து அவர்களை அறநெறியில் செய்தார். இவற்றையும் ஆசார்யாளுடைய வரலாற்றில் விவரமாகக் காணலாம். இந்த விஷயத்தை மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ



தீர்த்த மஹாஸ்வாமிகள், தாம் இயற்றிய அபிநவ வித்யாதீர்த்த வர்ணமாலா ஸ்தோத்திரத்தில்,

र्थमपूर्वं श्रुतेर्यस्तु यथावदवबोधयन् ।
शिष्यान्धर्मपथासक्तान्कुरुते तमहं श्रये ॥

என்று கூறுகிறார். (எவர் வேதத்தின் பொருளை அதில் உள்ளபடி கற்பித்து சிஷ்யர்களை தர்மத்தின் வழியில் பற்றுள்ளவர்களாகச் செய்கிறாரோ, அவரைச் சரணடைகிறேன்). ஆசார்யாள் தர்ம மார்க்கத்தைப் போதிப்பவராகத் திகழ்ந்தார் என்பதை மஹாஸந்நிதானம் இயற்றிய நாமாவளியில் “धर्माधर्मविभागज्ञ:” 9தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் உள்ள பாகுபாட்டை அறிந்தவர்), “नियमाचरणोत्सुक:” (நியமங்களைக் கடைப்பிடிப்பதில் உற்சாகமுள்ளவர்) “धर्मप्रचारनिरत:” (தர்மத்தைப் பரப்புவதில் ஈடுபட்டவர்) முதலான பெயர்களிலும் காணலாம்.

மேலும் இங்கே தர்மம் என்பது விசேஷமாக வைதிக தர்மத்தைக் குறித்தாலும், அந்த தர்மத்தில் சிரத்தை இல்லாத நாத்திகர்கள், அவைதிக மதத்தைச் சார்ந்தவர்கள் ஆகியோர் போற்றும் நற்குணங்களும் ஆசார்யாளிடம் அமைந்திருந்தன. இதற்கு உதாரணமாகக் கருணை, பொறுமை, செய்நன்றி அறிதல், எல்லோரையும் ஒன்றாகப் பார்க்கும் தன்மை போன்ற பலவற்றைக் கூறலாம். இந்த குணங்களால் நாத்திகர்கள் உள்ளிட்ட பலதரப் பட்டவர்களும் ஆசார்யாள் பால் ஈர்க்கப்பட்டார்கள். இந்நூலிலும் நாம் ஆசார்யாளின் குணங்களாக விவரிக்கப் போவதில் பலவும், உலகில் உள்ள எல்லோரும் பின்பற்றத் தக்கவை என்பதைப் பார்ப்போம்.

ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில் ஸ்ரீ ராமரைப் பற்றி “ராமரை மனிதனாகவும் பார்க்கலாம்; கடவுளாகவும் பார்க்கலாம். மனிதனாகப் பார்த்தால் அவர் நடந்து கொண்டபடி நடந்து நம் வாழ்க்கையை மேம்படுத்தலாம். நம்மைப் போல் அவருக்கும் பல கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தன. எல்லாவற்றையும் எதிர்கொண்டு இறுதியில் அவர் வெற்றி பெற்றார். அதே ராமரைக் கடவுளாகத் தியானம் செய்தால் நமக்கு மோக்ஷம் கிட்டும்” என்று கூறியுள்ளார். இது ஆசார்யாளின் விஷயத்தில் முற்றிலும் பொருந்துகிறது. ஏனென்றால் ஆசார்யாளைப் பரம்பொருளாக உபாஸித்தும், மனிதன் மோக்ஷம் அடைவது எப்படி என்பது பற்றி அவர் செய்த உபதேசங்களையும் , அவர் காட்டிய வழியையும் பின்பற்றுபவர்கள் மோக்ஷம் அடைகின்றனர். அதில் சிரத்தையோ நம்பிக்கையோ இல்லாதவர்கள் ஆசார்யாளிடம் அமைந்திருந்த நற்குணங்களைத் தம் வாழ்வில் பயின்றால் உலகில் சிறந்த மனிதர்களாக வாழலாம். இவ்வாறு ஆசார்யாள் முக்தி நெறி, அற நெறி என்ற இரண்டிற்கும் வழிகாட்டியாகவும், அதில் எப்படி நிலைபெற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கியதால் அவருடைய சிஷ்யர்களும் பிறரும் தத்தம் தகுதிக்கும் மனப்பாங்கிற்கும் ஏற்ப ஆசார்யாளின் பல பரிமாணங்களைக் காண்கின்றனர்.

(தொடரும் …) மிக்க நன்றி : Centre for Brahmavidya



# நீதி மஞ்ஜரீ

## ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் 1
### நல் வாழ்க்கை



Jagadguru Sri Abhinava Vidyatirtha Mahaswamigal and Jagadguru Sri Bharati Tirtha Mahaswamigal with Sri Jnanananda Bharati (purvashrama name : Sri Krishna Swami Aiyar) who was an ardent follower of Sringeri Mutt. He wrote many articles, experiences and life history of Jagadguru Sri Chandrashekhara Bharati Mahaswamigal, without which we would not have known much of this great Jivanmukta.
– Posted by N Jambunathan Iyer, Chennai Tamil Nadu India

தன்னிடத்தில் எவ்வளவு ஸ்நேஹம் வைத்திருக்கிறோமோ அந்த ஸ்நேஹத்தை மற்றவர்களிடத்திலும் வைக்க வேண்டியதென்று தாத்பர்யம். அவ்விதம் வைத்துவிட்டால், எந்த ஸுகியைப் பார்த்தாலும் நம் மனம் கலங்காது. அவரும் நம்மைச் சேர்ந்தவராயிருப்பதால் அவர் ஸுகியாயிருப்பதைப் பார்த்து நமக்கும் ஒருவாறு ஸுகம் ஏற்படும். நமக்கு வெகு தூர பந்துவாய் ஒருவர் இருக்கலாம்; அவர் பந்து என்று மாத்திரம் தெரியுமே தவிர நெருங்கிப் பழகாமலே இருந்திருக்கலாம்; அவருக்கு ஏதேனும் பெரிய உத்யோகப் பதவி கிடைத்துவிட்டால் அதில் நமக்கு சந்தோஷம் ஏற்படுகிறது. தன் ஸ்நேஹிதர்களிடம் “அவ்வுத்யோகம் கிடைத்திருக்கிறதே அவர் யார் தெரியுமா? என்னுடைய மைத்துனனுக்கு மைத்துனன்” என்று சொல்லி நம் ஸந்தோஷத்தை வெளிக்காட்டிக் கொள்ளத் தோன்றுகிறது. இவ்விதமாக ஸுகிகளிடத்தில் நமக்கு சம்பந்தப்பட்டவர்களென்று பாவனை இருந்துவிட்டால் அஸூயை முதலிய துர்குணங்கள் ஏற்பட்டு நம்முடைய மனத்தின் சாந்தியைக் கெடுக்காது. இந்த மனோபாவனையைத்தான் பதஞ்சலி பகவான் “மைத்ரீ” என்ற பதத்தால் குறிப்பிடுகிறார். இந்த மனோபாவனை விஸ்தாரமடையும் போது தன் குடும்பத்தாருடன், தன் இன பந்துக்கள் யாவரையும் வ்யாபிக்கும். பிறகு கிராமத்திலுள்ளவர்கள் எல்லாரிடமும் வ்யாபிக்கும். பிறகு தேசத்திலுள்ளவர்கள் எல்லாரிடத்திலும் வ்யாபிக்கும். இன்னமும் பெரிதாகிறபோது உலகத்திலுள்ள எல்லாரிடத்திலும் வ்யாபிக்கும். பிறகு மனுஷியர்களுடன் மாத்திரம் நின்றுவிடாமல் ஸகல மிருக பக்ஷியாதிகளையும் தன்னுடைய மைத்ரீக்கு விஷயமாக்கிக்கொள்ளும். பிறகு அசேதனமாய்த் தோன்றுகிற புல், பூண்டு முதல் ஸகல பிராணி வர்க்கங்களையும் இந்த மைத்ரீ கவர்ந்து கொள்ளும். சராசரமான ஜகத் பூராவையும் தானாகவே பாவிக்கும் நிலையாகிய “ஸர்வாத்ம பாவம்”ஏற்பட்டு விட்டால் அதுவே முக்தியென்று வேதம் கூறுகிறது. ஆகையால் இந்த “மைத்ரீ” என்ற குணத்தைக் கைக்கொள்ள ஆரம்பித்தால், அதுவே படிப்படியாய் நம்மைப் பரமபுருஷார்த்தமான மோக்ஷ நிலைக்கே கொண்டுபோய்விடக்கூடிய வல்லமையுள்ளதாயிருப்பதால் அதை எப்படியேனும் கைப்பற்ற வேண்டியது அவசியம்.

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி




# श्री भवसोदर्यष्टकम्

## ஶ்ரீ ப⁴வஸோத³ர்யஷ்டகம்

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹபாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

भजतां कल्पलतिका भवभीतिविभञ्जनी ।
भ्रमराभकचा भूयाद्भव्याय भवसोदरी ॥1॥
ப⁴ஜதாம்' கல்பலதிகா ப⁴வபீ⁴திவிப⁴ஞ்ஜனீ |
ப்⁴ரமராப⁴கசா பூ⁴யாத்³ப⁴வ்யாய ப⁴வஸோத³ரீ ||1||



தன்னைச் சார்ந்தவர்களுக்குக் கற்பகக் கொடி, பிறப்பிறப்பென்ற வாழ்க்கைத் தொடரால் விளைகிற பயத்தை நீக்குபவள், வண்டு போன்ற கூந்தலுள்ளவள், இந்த சிவ ஸஹோதரியான ஸரஸ்வதி நன்மை தரட்டும்.

करनिर्जितपाथोजा शरदभ्रनिभाम्बरा ।
वरदानरता भूयाद्भव्याय भवसोदरी ॥2॥
கரநிர்ஜிதபாதோ²ஜா ஶரத³ப்⁴ரனிபா⁴ம்ப³ரா |
வரதா³னரதா பூ⁴யாத்³ப⁴வ்யாய ப⁴வஸோத³ரீ ||2||

கைகளால் தாமரையை வென்றவள். சரத்காலத்து மேகம் போன்ற வெண்ணிற ஆடையுள்ளவள். விரும்பியதை வழங்குவதில் ஆர்வமுள்ளவள். இந்த சிவ ஸஹோதரி நன்மை தரட்டும்.

काम्या पयोजजनुषा नम्या सुरवरैर्मुहुः ।
रम्याब्जवसतिर्भूयाद्भव्याय भवसोदरी ॥3॥
காம்யா பயோஜஜனுஷா நம்யா ஸுரவரைர்முஹு: |
ரம்யாப்³ஜவஸதிர்பூ⁴யாத்³ப⁴வ்யாய ப⁴வஸோத³ரீ ||3||

தாமரையில் தோன்றிய பிரம்மாவின் ஆசைக்குகந்தவள், தேவர்களில் சிறந்தவர்களால் மீண்டும் மீண்டும் வணங்கத் தக்கவள், அழகிய தாமரையை இருப்பிடமாகக் கொண்டவள், இந்த சிவ ஸஹோதரி நன்மை தரட்டும்.

कृष्णादिसुरसंसेव्या कृतान्तभयनाशिनी ।
कृपार्द्रहृदया भूयाद्भव्याय भवसोदरी ॥4॥
க்ரு'ஷ்ணாதி³ஸுரஸம்'ஸேவ்யா க்ரு'தாந்தப⁴யநாஶினீ |
க்ரு'பார்த்³ரஹ்ரு'த³யா பூ⁴யாத்³ப⁴வ்யாய ப⁴வஸோத³ரீ ||4||

கிருஷ்ணன் முதலிய தேவர்களால் பணிவிடை புரியப் பெற்றவள், விதியின் முடிவான யம பயத்தை போக்குபவள், பரிவால் ஈரமான இதயம் கொண்டவள், இந்த சிவ ஸஹோதரி நன்மை தருபவளாகட்டும்.



मेनकादिसमाराध्या शौनकादिमुनिस्तुता ।
कनकाभतनुर्भूयाद्भव्याय भवसोदरी ॥5॥
மேனகாதி³ஸமாராத்⁴யா ஶௌனகாதி³முநிஸ்துதா |
கனகாப⁴தனுர்பூ⁴யாத்³ப⁴வ்யாய ப⁴வஸோத³ரீ ||5||

மேனகை முதலிய அப்சரஸ்களால் ஆராதிக்கப் பெற்றவள், சௌனகர் முதலிய முனிவர்களால் துதிக்கப் பெற்றவள். தங்கம் போன்ற மேனி கொண்டவள். இந்த சிவ ஸஹோதரி நன்மை தரட்டும்.

वरदा पदनम्रेभ्य: पारदा भववारिधे: ।
नीरदाभकचा भूयाद्भव्याय भवसोदरी ॥6॥
வரதா³ பத³னம்ரேப்⁴ய: பாரதா³ ப⁴வவாரிதே⁴: |
நீரதா³ப⁴கசா பூ⁴யாத்³ப⁴வ்யாய ப⁴வஸோத³ரீ ||6||

தன் திருவடிகளில் வணங்குபவருக்கு விரும்பியதை அளிப்பவள், பிறப்பிறப்புத் தொடர்க்கடலின் அக்கரை சேர்ப்பவள், கார்மேகம் போன்ற கூந்தலுள்ளவள், இந்த சிவ ஸஹோதரி நன்மை வழங்குபவளாகட்டும்.

विनताघहरा शीघ्रं विनतातनयार्चिता ।
पीनतायुक्कुचा भूयाद्भव्याय भवसोदरी ॥7॥
வினதாக⁴ஹரா ஶீக்⁴ரம்' வினதாதனயார்சிதா .
பீனதாயுக்குசா பூ⁴யாத்³ப⁴வ்யாய ப⁴வஸோத³ரீ ..7..

வணங்குபவரின் பாபத்தை குறையை விரைவில் அகற்றுபவள், வினதையின் புதல்வனான கருடனால் (அருணனால்) அர்ச்சிக்கப் பெற்றவள், பருமன் மிக்க மார்பகம் கொண்டவள், இந்த சிவ ஸஹோதரி நன்மை வழங்கட்டும்.

वीणालसत्पाणिपद्मा काणादमुखशास्त्रदा ।
एणाङ्कशिशुभृद्भूयाद्भव्याय भवसोदरी ॥8॥
வீணாலஸத்பாணிபத்³மா காணாத³முக²ஶாஸ்த்ரதா³ |
ஏணாங்கஶிஶுப்⁴ரு'த்³பூ⁴யாத்³ப⁴வ்யாய ப⁴வஸோத³ரீ ||8||

வீணை துலங்குகிற தாமரை போன்ற கைகளுள்ளவள், நியாயம் முதலிய சாஸ்திரங்களை வெளிக் கொணர்ந்தவள் (சாஸ்திர அறிவை வழங்குபவள்). மானை அடையாளமாகக் கொண்ட சந்திரனாகிய சிசுவை தலையில் தாங்குபவள். இந்த சிவ ஸஹோதரி நன்மை வழங்கட்டும்.

अष्टकं भवसोदर्या: कष्टनाशकरं द्रुतम् ।
इष्टदं संपठन् शीघ्रमष्टसिद्धीरवाप्नुयात् ॥9॥
அஷ்டகம்' ப⁴வஸோத³ர்யா: கஷ்டநாஶகரம்' த்³ருதம் |
இஷ்டத³ம்' ஸம்பட²ன் ஶீக்⁴ரமஷ்டஸித்³தீ⁴ரவாப்னுயாத் ||9||

இந்த பாவஸோதர்யஷ்டகம் விரைவில் துயரத்தை அகற்றும். விரும்பியதைத் தரும். இதனைப் படிப்பவன் விரைவில் எட்டு ஸித்திகளையும் பெறுவான். (அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஐஸ்வர்யம், வசித்வம் என எட்டு ஸித்திகள்)



# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

**(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)**

### அத்தியாயம் 2

**நாரத - ஸனத்குமாரர் உரையாடல்; சோமதத்தன் சாபம் நீங்குதல்.**

அந்தணர்களே ! இதனிடையில் தேவரிஷியான நாரதர், விஷ்ணுவின் பெயரான நாராயணன் முதலிய திருநாமங்களைக் கீர்த்தனம் செய்து கொண்டு அவ்விடத்திற்கு வந்தார். நாராயணா, அச்யுதா, அனந்தா, வாசுதேவா, ஜனார்தனா, யக்ஞசா, யக்ஞபுருஷா, ராமா, விஷ்ணோ - உங்களுக்கு நமஸ்காரம். இவ்வாறு உலகத்தையே புனிதப்படுத்தும் பகவான் ஸ்ரீஹரியின் நாமங்களை உச்சரித்துக் கொண்டும், உலக மக்களின் பாவங்களைப் போக்கும் கங்கையைத் துதித்துக் கொண்டும் நாரதமுனிவர் அங்கு வந்து சேர்ந்தார்.



மஹாதேஜஸ்விகளான ஸனகர் முதலானோர் நாரதர் வருவதைப் பார்த்தும், முறைப்படி அவரை வரவேற்று உபசரித்தார்கள். அவரும், அந்த முனிவர்களுக்குத் தலைவணங்கி, தன் மரியாதையைத் தெரிவித்தார்.

பின்னர், முனிவர்கள் நிறைந்திருந்த அந்தக் கூட்டத்தில், நாராயண நாமத்திலேயே மூழ்கித் திளைக்கும் முனிசிரேஷ்டரான நாரதரைப் பார்த்து ஸனத்குமாரர் பின்வருமாறு கூறினார்.

**ஸனத்குமாரர் கூறினார் : -** பேரறிவாளரே ! முனிவர்களில் தலையாயவரே ! நாரதரே ! தாங்கள் எல்லாம் அறிந்தவர். தாங்கள் விஷ்ணுபக்தியில் ஊறித்திளைத்துக் கொண்டிருப்பவர். ஆகவே, தங்களைக் காட்டிலும் மேலானவர் எவருமேயில்லை.

அசையும் பொருள் - அசையாப் பொருள் நிறைந்த இவ்வுலகம் எவரிடமிருந்து தோன்றியதோ, எவருடைய திருவடிகளிலிருந்து கங்கைநதி உற்பத்தியானதோ, அந்த ஸ்ரீஹரியைப் பற்றிய ஞானம் எவ்வாறு உண்டாகும்? தங்களுக்கு எங்களிடம் கருணை இருக்குமேயானால், இது பற்றிய உண்மையான விளக்கங்கள் எங்களுக்குக் கூறவேண்டும்.

**நாரதர் கூறியது: -** எவர் மிக உயர்ந்தவரோ, தேவதேவரோ, மேலானவற்றுக்கெல்லாம் மிக மேலானவரோ, மிக மகிமை பொருந்திய



இடத்தில் வசிப்பவரோ, எல்லா குணங்களும் உடையவரோ, குணங்கள் அற்றவரோ, அந்த மஹாபுருஷரை (ஸ்ரீராமனை) வணங்குகிறேன்.

ஞானம்-அக்ஞானம், தருமம்-அதருமம், வித்தை-அவித்தை வடிவினரும், எல்லோருடைய ஆத்மாவிலும் அவரவர் வடிவமாக விளங்குபவருமான தங்களுக்கு நமஸ்காரம். அசுரர்களைக் கொன்றவர்,, நரகத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர்.அதாவது நரக பயத்தைப் போக்குபவர். விரல்களின் அசைவினாலேயே அவ்வளவு எளிதாக தருமத்தைக் காப்பவர்; பூமியின் சுமையைக் குறைப்பதற்காக லீலா விநோதங்களைச் செய்வதில் விருப்பமுடையவர். ரகுகுலத்தின் ஒளிவிளக்குப் போன்ற இராமதேவனை வணங்குகிறேன்.

தான், ஒரே வஸ்து ஆனாலும், தன்னை நான்கு உருவங்களாகப் பிரித்து, அவதாரம் செய்து, வானரவீரர்களால் சூழப்பட்டு இலங்கைக்குச் சென்று அரக்கர் படையைக் கொன்றொழித்த தசரதகுமாரர் ஸ்ரீ ராமனை வணங்குகிறேன்.

ராமனுடைய பெருமையைக் காட்டும் இப்படிப்பட்ட புனிதமான வரலாறுகள் எல்லையில்லாமல் இருக்கின்றன. கோடிக்கணக்கான ஆண்டுகளானாலும் அவைகளை எண்ணி முடியாது. மனுக்களாலும் , முனிவர்களாலும் கூட எவருடைய திருநாமத்தின் பெருமையின் எல்லையைக் காணமுடியாதோ, அந்த எல்லையை மிகவும் சாமானியனான நான் எவ்வாறு அடையமுடியும் ?

மஹா பாதகங்களைச் செய்தவர்களும் எந்தத் திருநாமத்தை ஸ்மரிப்பதால் பரிசுத்தத்தை அடைகிறார்களோ, அந்த மஹிமை பொருந்திய ஸ்ரீராமனை சிற்றறிவாளனாகிய நான் எவ்வாறு தோத்தரிக்க முடியும் ? கோரமான கலியுகத்தில், இராமாயணத்தில் மூழ்கித் திளைக்கும் இருபிறப்பாளர்களே! வாழ்க்கைக் கடமைகளைச் செய்து முடித்துவிட்டவர் ஆவார்கள். அவர்கள் தேவ-ரிஷி-பித்ரு-கடன்களிலிருந்து விடுபட்டவராவார்கள். அவர்களை நான் எப்போதும் வணங்குகிறேன்.கார்த்திகை, மாசி, சித்திரை மாத வளர்பிறையில் ஒன்பது நாட்களுக்குக் கேட்பது என்ற முறைப்படி இராமாயணம் பாராயணம் பருக வேண்டும்.

(தொடரும் …..)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்